Puducherry/ Tamil                    18.10hrs/ 19.12.2024

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 19.12.2024                    நேரம்- மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

டாக்டர் பி ஆர் அம்பேத்கார் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக நாடாளுமன்ற இரு அவைகளிலும் இன்றும் அலுவல்கள் பாதிக்கப்பட்டன.

பாதுகாப்புத் துறையில் தன்னிறைவை நோக்கி, நாடு, விரைந்து முன்னேறி வருவதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார்.

தமிழகத்தில் 18 மாவட்டங்களில், மொத்தம் 178 கோடி ரூபாய் மதிப்பில், 34 உயர்மட்டப் பாலங்களைக் கட்ட, முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

புதுச்சேரியில் இருந்து ஐதராபாத் மற்றும் பெங்களுருக்கு, நாளை முதல், விமான சேவை மீண்டும் தொடங்க உள்ளது.

நாடாளுமன்றம்

டாக்டர் பி ஆர் அம்பேத்கார் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக இன்று 2-ஆவது நாளாகவும் நாடாளுமன்றத்தில் அமளி ஏற்பட்டதால் இரு அவைகளிலும் அலுவல்கள் பாதிக்கப்பட்டன.

மக்களவையில் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்கட்சி உறுப்பினர்கள் அவையின் மையப் பகுதியில் கூடி மத்திய உள்துறை அமைச்சருக்கு எதிராக கோஷமிட்ட நிலையில், அவையின் அலுவல்கள், முதலில் ஒரு முறையும், பிற்பகல் 2 மணிக்கு மேல் நாள் முழுவதற்கும் ஒத்திவைக்கப்பட்டன.

மாநிலங்களவையில் முதலாவது ஒத்தி வைப்பிற்கு பின்னர் பிற்பகல் 2 மணிக்கு அலுவல்கள் மீண்டும் தொடங்கிய போது, இன்று நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்கட்சிகளும் ஆளும் கூட்டணி கட்சிகளும் நடத்திய ஆர்ப்பாட்டங்களில், 2 பிஜேபி எம்பிக்களுக்கு காயம் ஏற்பட்டது குறித்து அவையில் பிரச்சனை எழுப்பப்பட்டது.

சம்பவம் குறித்து மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி மன்னிப்பு கேட்க வேண்டும் என, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கோரினார். சம்பவம் குறித்து அவையில் கண்டன தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென அவை முன்னவர் திரு

ஜேபி நட்டா வலியுறுத்தினார். அமைதி ஆர்ப்பாட்டத்தில் தாங்கள் ஈடுபட்டிருந்த போது திரு ராகுல்காந்தி மிக அருகே வந்ததால் தமக்கு சங்கடம் ஏற்பட்டதாக பாரதிய ஜனதாவைச் சேர்ந்த பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறி இருப்பது குறித்து விசாரித்து வருவதாக, அவைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் தெரிவித்தார்.

பிஜேபி எம்பிக்களை திரு ராகுல்காந்தி தள்ளிவிட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை திமுக உறுப்பினர் திரு திருச்சி சிவா மறுத்தார். திரு ராகுல்காந்தி நாடாளுமன்றத்தில் நுழைந்த போது அவர் தான் தள்ளி விடப்பட்டதாக திரு சிவா கூறினார்.

இதற்கிடையே தள்ளு-முள்ளு சம்பவத்தில் காயம் அடைந்த 2 பிஜேபி எம்பிக்களை பிரதமர் திரு நரேந்திர மோடி தொடர்பு கொண்டு நலம் விசாரித்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

*பாதுகாப்பு*

பாதுகாப்புத் துறையில் தன்னிறைவை நோக்கி நாடு விரைந்து முன்னேறி வருவதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் முன்பு இறக்குமதி செய்யப்பட்ட ஆயுதங்கள் தற்போது உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுவதாகவும், பொதுத் துறை, தனியார் துறை, கல்வித் துறை மற்றும் புதுமைப் படைப்பாளர்களின் கூட்டு முயற்சியே இதற்கு காரணம்

என்றும் கூறினார். இளைஞர்களிடையே புதுமையாக்க உணர்வை ஊக்குவிக்க அரசு பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். நவீன போர் முறைகள் தொடர்ந்து மாறி வருவதால், அதற்கேற்ப புதிய தொழில் நுட்பங்களை இந்தியாவின் பாதுகாப்புத் துறையில் புகுத்துதல் அவசியம் என திரு ராஜ்நாத் சிங் வலியுறுத்தினார். இளம் புதுமை படைப்பாளர்களின் முயற்சியால் வரவிருக்கும் காலங்களில் இந்தியா பாதுகாப்புத் தொழில்நுட்பத்தில் புதிய ஏற்றங்களை எட்டும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஜல்சக்தி

நாட்டில் அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் குழாய் மூலமான குடிநீர் இணைப்பு வழங்கப்படுவதை உறுதிப்படுத்த, மத்திய அரசு மாநில அரசுகளுடன் இணைந்து செயல்பட்டு வருவதாக, மத்திய ஜல்சக்தி அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய அளவில் இன்னும் 4 கோடி கிராமப்புற வீடுகளுக்கு குழாய் மூலமான குடிநீர் இணைப்பு வழங்க வேண்டி இருப்பதாகவும், இதற்கான பணிகளை துரிதப்படுத்துமாறு மத்திய அரசு மாநில அரசுகளை வலியுறுத்தி இருப்பதாகவும் கூறினார்.

மத்திய அரசின் ஜல்சக்தி இயக்கத்தினால் கிராமப்புற வேலை வாய்ப்புகள் அதிகரித்து, நகரங்களுக்கு இடையிலான புலப்பெயர்வின்

தேவை குறைந்து இருப்பதாக தெரிவித்தார். பெரும்பாலும் இளைஞர்கள் மற்றும் பெண்களே இதனால் பயன்பெற்றுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

*மருத்துவ உபகரணம்*

இந்தியாவில் மருத்துவ தேவைகளும், சந்தை வாய்ப்புகளும் அதிகரித்து வருவதால் நாட்டில் மருத்துவ உபகரணங்களின் உற்பத்தி துறையின் வளர்ச்சிக்கு ஏராளமான வாய்ப்புகள் இருப்பதாக மத்திய சுகாதார துறை இணை அமைச்சர் திருமதி அனுபிரியா பட்டேல் கூறி உள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற வருடாந்திர சுகாதார உச்சி மாநாட்டில் அவர் பேசுகையில் இந்தியாவின் மருத்துவ உபகரணங்களின் உற்பத்தி துறையின் மதிப்பு, 2030-ஆம் ஆண்டிற்குள், 30 பில்லியன் டாலராக. 2 மடங்கிற்கும் மேல் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். உலக அளவில் ஜப்பான், சீனா, தென்கொரியாவிற்கு அடுத்தபடியாக, மருத்துவ உபகரணங்கள் உற்பத்தி துறையில் 4-ஆவது மிகப் பெரிய நாடாக இந்தியா திகழ்வதாகவும், வரவிருக்கும் ஆண்டுகளில் மருத்துவ உபகரணங்களின் முக்கிய ஏற்றுமதி நாடாக இந்தியா மேம்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

*தரம்*

நுகர்வோர் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலான மத்திய அரசின் தரக் கட்டுப்பாட்டு உத்தரவிற்கு உட்பட்ட பொருட்களின் பட்டியலில் தற்போது 750 உற்பத்தி பொருட்கள் இடம் பெற்றுள்ளதாக, மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலர் திருமதி நிதிகாரே கூறி உள்ளார். நாட்டில் தரமான உற்பத்திக்கு ஏற்ற சூழலை வலுப்படுத்துவது குறித்து புதுடெல்லியில் இன்று நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய அவர், மத்திய அரசின் தரக்கட்டுப்பாட்டு உத்தரவினால், உலக அளவிலான உற்பத்தி சந்தையில் இந்தியாவின் பங்கு அதிகரிக்கவும் ஏதுவாகும் என்றார். இ-வர்த்தக இணைய தளங்களில், ISI மற்றும் BSI தரமுத்திரையுடன் கூடிய பொருட்களை மட்டுமே விற்க, அரசு அறிவுறுத்தி இருப்பதாக திருமதி நிதிகாரே தெரிவித்தார். இந்திய பொம்மை உற்பத்தி துறையின் ஏற்றுமதி, 250 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாகவும் அவர் கூறினார்.

*ஸ்டாலின்*

தமிழகத்தில் 18 மாவட்டங்களில், மொத்தம் 178 கோடி ரூபாய் செலவு மதிப்பில், 34 உயர்மட்டப் பாலங்களைக் கட்ட, முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் இணைப்பு வசதிகள் இல்லாத பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து, திருச்சியில் 3 பாலங்களும், விழுப்புரம், வேலூர், நெல்லை,தூத்துக்குடி

உள்ளிட்ட மாவட்டங்களில் இதர பாலங்களும் அமைய உள்ளன. கட்டுமானப் பணிகள் உடனடியாக தொடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்றும் நாளையும் ஈரோடு மாவட்டத்தில் கள ஆய்வில் ஈடுபட்டுள்ளார். இதன் ஒரு பகுதியாக நாளை, 951 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை அவர் தொடக்கி வைத்து, 222 புதிய திட்டப் பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

*விமான சேவை-இன்ட்ரோ*

புதுச்சேரியில் இருந்து ஐதராபாத் மற்றும் பெங்களுருக்கு, நாளை முதல் விமான சேவை மீண்டும் தொடங்க உள்ளது. இந்திய விமான நிலையங்கள் ஆணை அமைப்பும், இண்டிகோ நிறுவனமும் இணைந்து விமான நிலையத்தின் முனையக் கட்டிடத்தில் ஏற்பாடு செய்துள்ள தொடக்க விழாவில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் பங்கேற்க உள்ளனர். நாளை மதியம் 12.25-க்கு புதுச்சேரி வந்து சேரும் முதலாவது விமானத்தின் பயணிகளுக்கு, நீர் பீரங்கி வணக்கம் செலுத்தப்படும் என விமான நிலைய இயக்குநர் திரு ராஜசேகர ரெட்டி தெரிவித்துள்ளார். புதுச்சேரியின் போக்குவரத்து தொடர்புகளை மேம்படுத்துவதன் மூலம், சுற்றுலா

வளர்ச்சிக்கான கதவுகளை திறந்து விடவும், யூனியன் பிரதேசத்தின் பொருளாதாரத்தை ஊக்குவிக்கவும், விமான சேவை உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். விமான சேவை குறித்து மேலும் சில தகவல்கள்………. **(வாய்ஸ்)**

*விமான சேவை -வாய்ஸ்*

புதுச்சேரியில் நாளை முதல் தொடங்கும் புதிய ஏற்பாடுகளின் படி, தினசரி காலை 11.10-க்கு பெங்களூரில் இருந்து புறப்படும் விமானம், மதியம் 12.25-க்கு புதுச்சேரி வந்தடையும்.

மதியம் 12.45-க்கு புதுச்சேரியில் இருந்து விமானம் புறப்பட்டு, 2.30-க்கு ஐதராபாத் சென்றடையும்.

ஐதராபாத்தில் இருந்து மதியம் 3.05-க்கு புறப்படும் விமானம், மாலை 4.50-க்கு புதுச்சேரி வந்தடையும்.

மாலை 5.10-க்கு புதுச்சேரியில் இருந்து விமானம் புறப்பட்டு, 6.35-க்கு பெங்களூர் சென்றடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*நேரு-கடிதம்*

புதுச்சேரி சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம் மரபுகளை மீறி செயல்படுவதாக உருளையன்பேட்டைத் தொகுதி சுயேட்சை சட்டமன்ற உறுப்பினர் திரு நேரு குற்றம் சாட்டி உள்ளார். சபாநாயகர் மீது

நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதாக தெரிவித்து இன்று அவர் சட்டப்பேரவைச் செயலர் திரு தயாளனிடம் கடிதம் கொடுத்தார். சபாநாயகர் நடுநிலையோடு செயல்படவில்லை என ஏற்கனவே குற்றம் சாட்டி வரும் எதிர்கட்சிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதாக, பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் கூறினார்.

செல்வம்-விளக்கம்

இதற்கிடையே, நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து இன்று சட்டப்பேரவை தலைவர் திரு செல்வத்திடம் செய்தியாளர்கள் கருத்து கேட்ட போது, சட்டமன்ற உறுப்பினர் திரு நேரு பொதுக் கணக்கு குழுவில் இருந்து நீக்கப்பட்டதால் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாகவே, தமக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கோரி கடிதம் கொடுத்திருப்பதாக கூறினார். சட்ட விதிகளுக்கு உட்பட்டே, அரசு விழாக்கள் மற்றும் தனிப்பட்ட விழாக்களில் தாம் கலந்து கொள்வதாகவும் முதலமைச்சரின் அழைப்பின் பேரிலேயே அவரது அலுவலகத்திற்கு செல்வதாகவும் திரு செல்வம் தெரிவித்தார். நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து, சட்டப் பேரவை கூடும் போது, பேரவை முன் வைக்கப்பட்டு, தீர்வு காணப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

இருதய நோய்

இருதய கோளாறால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை இளம் வயதிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் வகையில் புதுச்சேரி ராஜீவ்காந்தி குழந்தைகள் மற்றும் பெண்கள் மருத்துவமனையில் செயல்படும் மாவட்ட ஆரம்ப நிலை தலையீட்டு மையத்தின், ஆரோக்ய இருதயம் இயக்கத்தை, முதலமைச்சர் திரு ரங்கசாமி நாளை தொடக்கி வைக்கிறார். சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு கே எஸ் பி ரமேஷ், மற்றும் சுகாதாரத் துறைச் செயலர் திரு ஆஷிஷ் மாதோவ்ராவ் மோரே உள்ளிட்ட அதிகாரிகள், இதில் பங்கேற்க உள்ளனர்.

வானிலை

இன்று தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்க கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, அடுத்த 12 மணி நேரத்தில், வடதமிழக மற்றும் தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளை நோக்கி நகர்ந்து, அதற்கடுத்த 24 மணி நேரத்தில், வடக்கு திசையில், ஆந்திர கடலோரப் பகுதிகளை ஒட்டி நகரக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக அடுத்த சில நாட்களுக்கு தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. இன்றும் நாளையும் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனி

மூட்டம் காணப்படும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் கடலோரப் பகுதிகள் மற்றும் வங்க கடல் பகுதிக்குள் மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சென்னை பேசின் பிரிட்ஜ் மண்டலம் மற்றும் கத்திவாக்கம் மண்டலத்தில் தலா 7 செமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

படகு விபத்து

மும்பை கடற்கரைக்கு அப்பால் கராஞ்சா பகுதியில் பரிசோதனை ஓட்டத்தில் இருந்த கடற்படை படகு ஒன்று, கட்டுப்பாட்டை இழந்து பயணிகள் படகு மீது மோதியதால் விபத்து ஏற்பட்ட இடத்தில் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கடற்படைக்கு சொந்தமான 4 ஹெலிகாப்டர்கள் மற்றும் 11 படகுகளும் கடலோர காவல்படை படகு ஒன்றும் கடலோர காவல்நிலையத்தின் 3 படகுகளும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பாதுகாப்பு படையினர் மூவர் உட்பட மொத்தம் 13 பேர் இந்த விபத்தில் உயிர் இழந்தனர். 105 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் இருவரை காணவில்லை என்றும் தகவல் வெளியாகி உள்ளது. விபத்து குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி துயரம் வெளியிட்டுள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாய் கருணைத்

தொகையும், காயம் அடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என அவர் அறிவித்துள்ளார். விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு, மகாராஷ்டிர அரசும், தலா 5 லட்ச ரூபாய் கருணைத் தொகை அறிவித்துள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

டாக்டர் பி ஆர் அம்பேத்கார் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக நாடாளுமன்ற இரு அவைகளிலும் இன்றும் அலுவல்கள் பாதிக்கப்பட்டன.

பாதுகாப்புத் துறையில் தன்னிறைவை நோக்கி, நாடு, விரைந்து முன்னேறி வருவதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார்.

தமிழகத்தில் 18 மாவட்டங்களில், மொத்தம் 178 கோடி ரூபாய் மதிப்பில், 34 உயர்மட்டப் பாலங்களைக் கட்ட, முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

புதுச்சேரியில் இருந்து ஐதராபாத் மற்றும் பெங்களுருக்கு, நாளை முதல், விமான சேவை மீண்டும் தொடங்க உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------